Regd. No. M. 4593. KUDI ARASU 8 பக்கங்கள்

# குடி அரசு

Est 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-0 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 9-3-1946 மாசிமீ 26உ { மலர் 22

# இறுதிப் போராட்டத்திற்கு அழைப்பு

## பெரியார் வீர முழக்கம்

★

2-3-46ல் திருச்சி உறையூர் திராவிட கழக ஆண்டுவிழாவிலும், 3-3-46 காலை திருச்சி சோழங்கநல்லூரில் பழயகோட்டை இளைய பட்டக்காரர் அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடந்த திருச்சி ஜில்லா மாநாட்டிலும், 3-3-46 மாலை திருச்சி புத்தூர் மைதானத்தில் தோழர் வேதாசலம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்திலும் பெரியார் ஈ. வெ. ரா. நிகழ்த்திய சொற்பொழிவுத் தொகுப்பு; கூட்டத்திற்கு பதினாயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தார்கள். தோழர்கள் அண்ணாதுரை ஈ. வி. கே. சம்பத்து முதலியவர்களும் பேசினார்கள்.

பெரியார் ஈ. வெ. ரா. பேச்சு

தோழர்களே,

நாம் இதுபோது மிக்க நெருக்கடியான நிலையில் பரிதபிக்கத்தக்க விதமாய் இருக்கிறோம். நாம் இன்று நாடுமுழுவதும் மிக்க உற்சாகத்தோடு நடைபெறும் தேர்தல் காரியங்களில் அடியோடு விலகி நிற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதை பல அரசியல் வாதிகள் நாம் அரசியல் தற்கொலை செய்துகொண்டதாகச் சொல்லுகிறார்கள். உண்மையாய் இருந்தாலும் இருக்கலாம். அரசியலை வெறுத்து இப்படி இருக்கவில்லை. இன்றைய நம் தகுதிக்கு நிலைக்கு இதுதான் சாத்யமானதும் ஏற்றதுமானதுமான காரியமாகும். நாம் கட்டுப்பாடற்றதும் நாட்டுணர்ச்சி, இனஉணர்ச்சி அற்றதுமான ஒரு சமுதாயமாக ஆக்கப்பட்டு விட்டோம். தேர்தலுக்கு நின்றால் என்ன செய்வது? வெற்றிபெறுவோமா? தேர்தல் செலவுக்கு நம்மிடம் பணமிருக்கிறதா? இருக்கிறவர்கள் முன்வருகிறார்களா? அவர்கள் நம்பத்தக்கவர்களா? இவை ஒருபுறம் இருக்கட்டும். இன்றைய தேர்தல் ஜனநாயகமானதாக இருக்கிறதா? நாம் 100க்கு 90-பேர்களாய் இருக்கிறோம். நம்மவர்களில் 100க்கு 10பேருக்குத்தான் ஓட்டு. அந்த 10பேர்களும் மீதி 80பேர்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்கத் தகுதிஅற்றவர்கள் என்பது மாத்திரமல்லாமல் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதுகூடத் தெரியாதவர்கள். பெரிதும் தங்கள் சுயநலத்துக்கு எதையும் செய்யத் தயாராய் இருந்துகொண்டு அரசியல்வாழ்வில் புகுந்தவர்கள். புகுகிறவர்கள்.

இன்று நம்மவர்கள் என்பவர்களில் அரசியலில் புகுந்த மக்களில் 100க்கு 75பேர் எதிரிகளுக்கு கூலியானவர்கள். மீதி 25பேர்களில் 20பேர்கள் தங்கள் நலனுக்குஆக மற்றவர்களைக் காட்டிக்கொடுத்து, அந்தக் காட்டிக்கொடுக்கும் தன்மையை படிக்கட்டாக வைத்து மேலேறி பட்டம் பதவி பணம் தேடிக்கொண்டவர்கள். இந்த நிலையில் நாம் தேர்தலுக்கு நிற்காதது தற்கொலை என்று சொல்லப்பட்டாலும் சரி அதை புத்திசாலித்தனமான தற்கொலை என்றாவது சொல்லுவேன்.

அன்றியும் நமது சர்க்கார் நடந்துகொண்ட மாதிரியானது யோக்கியனுக்கும், உண்மையான தன்மையில் நம் மக்கள் நலம் கோருபவருக்கும் தேர்தலில் இடமில்லாதபடியாக நிலைமை ஏற்பட்டு விட்டது.

இந்த சர்க்காரார் யோக்கியர்களை மதிப்பதுமில்லை. அன்றியும் சர்க்காரார் நாணயம், நீதி, பொதுஜன அமைதி, சமாதானம் ஆகியவைகளைக் காப்பதில் மிக்க அலட்சியம்காட்டி நாட்டில் நாணயக்கேடும் காலித்தனமும் வளரும்படி விட்டுவிட்டார்கள்.

இன்று இந்தியா கண்டம் முழுவதும், நமது நாடுமுழுவதும் பித்தலாட்டமும், காலித்தனமும் தாண்டவமாடுகிறது. கவர்னர்கள் கவலையற்ற சுகவாசிகளாக இருக்கிறார்கள். வைஸிராய் அனுபமற்றவரும் நிருவாகத் திறமை அற்றவருமாக இருக்கிறார். ஓலைக்குடிசைகளில் தீப்பற்றிக்கொண்டு பரவுவதுபோல் காலித்தனங்கள் வளர்ந்து நாடு முற்றும் பரவிக்கொண்டு இருப்பதைத் தடுக்க, பரவவொட்டாமல் செய்ய பயனளிக்கும்படியான முயற்சி சர்க்காரால் செய்யப்படவே இல்லை. நம் எதிரிகள், காலிகள் இந்த நிலையை மிகுதியும் பயன்படுத்தி நலன்பெற்று வருகிறார்கள்.

இந்த தன்மைக்கோ அல்லது இதை சமாளிக்கும் தன்மைக்கோ நாம் நம்மை இன்னும் தகுதி ஆக்கிக்கொள்ளவில்லை. ஆதலாலும் தேர்தலில் நாம் விலகி இருப்பது தவிர இன்று நமக்கு வேறு வகை இல்லை

நாட்டில் 4-வருடங்களுக்குமுன் நடந்த நாசவேலைகளான தண்டவாளம் பெயர்த்தல், தந்தி அறுத்தல், கட்டடங்கள் கொளுத்தல் அதிகாரிகளைக் கொல்லுதல் ஆகிய காரியங்களிலும், சர்க்கார் யுத்த முயற்சிக்குஆக செய்யப்பட்ட காரியங்களை எதிர்த்து ஒரு கூட்டத்தார் தடைசெய்த காரியங்களிலும் நாம் கலவாமல் இருந்ததும், அக்காரியங்களை எதிர்த்ததும் இன்று நமக்கு தேர்தலில் நிற்க யோக்கியதைக் குறைவாகி விட்டதுடன், அம்மாதிரி கெட்ட காரியம் செய்தவர்களுடன் குலாவவேண்டிய தாழ்ந்த நிலை சர்க்காரிடம் ஏற்பட்டுவிட்டதாலும், (ஓட்டர்களால்) அப்படிப்பட்டவர்களே விரும்பப்படுகிறார்கள். சர்க்காரின் இந்தத் தன்மையை நாம் வெறுக்கிறோம், என்பதற்கு ஆகவே முக்கியமாய் தேர்தலில் விலகி இருக்கவேண்டியவர்களாகிறோம்.

ஆகையால் நாம் தேர்தலில் விலகி இருப்பதுகுறித்து வருந்த வேண்டியதில்லை. எதிரிகள் பதவிக்கு வாட்டும், அவர்களைக்கொண்டு இந்த சர்க்கார் தங்கள் நலத்தை பெருக்கிக்கொள்ளட்டும் நமக்குக் கவலை

யில்லை. ஆனால் நாம் இம்மாதிரி அலட்சியப்படுத்தப்படவும், புறக்கணிக்கப்படவும், ஏமாற்றப்படவும் தகுதி உடையவர்களாகவே நாம் வாழ்நாள் முழுவதும் இருப்பதா அல்லது நாம் ஒரு கட்டுப்பாடான மானவுணர்ச்சி உள்ளவர்களான, துணிவும், வீரமும், உயிரையும் கொடுத்து நம் உரிமையைப் பெரும்படியான ஒரு மனித சமுதாயமாக ஆகி நம் எதிரிகள் செய்ததையெல்லாம் நாமும் செய்யக்கூடியவர்கள் என்பதாக ஆகி நம் நாட்டை நாம் அடைந்து மனிதத்தன்மை பெருவதா என்பதுதான் இன்றைய நமது பிரச்சினையாகும். இதை அடைய நம்மை தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ளவும் நாம் இன்று வீண் வேலையில் ஈடுபடாமல் மக்களைத் தயாராக்கும் வேலையில் ஈடுபட்டு இருக்கிறோம்.

தோழர்களே! முதலாவதாக நாம் ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளடங்கியவர்களாக ஆகாமல் நம்மால் ஒரு காரியமுமாகாது. நமக்கு புத்தி, பணம், சக்தி இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. சர் ராமசாமி, சர் ஷண்முகம் போன்ற டஜன்கணக்கான சர்கள், நாட்டுக்கோட்டையார்கள், மில் முதலாளிகள் ஆயிரக் கணக்கான வேலி நிலம் கொண்ட நூற்றுக்கணக்கான மிராசுதார்கள், ராஜாக்கள், ஜமீன்தாரர்கள் ஆன கோடீஸ்வரர்கள் இல்லையா? மற்றும் நினைத்தால் தண்டவாளம் பெயர்க்க, கட்டடம் இடிக்க, கடையைமூட பள்ளியை மறியல்செய்ய சக்திஉள்ள நாச வேலை வீரஆண்கள் இல்லையா? எதிரிகளுக்கு ஆதரவளித்து அன்னக்காவடிகளையும் ஆட்சி பீடத்தில் அமர்த்தி தலைவர்களாக்கி நம்மை அடக்க கை தூக்கும் 5ம் படை இல்லையா? என்ன இல்லை நம்மிடம்? ஆனால் மானம், இன, உணர்ச்சி, நாட்டுவுணர்ச்சி நம் சமுதாய இழிவைக்கண்டு வெட்கப் படும் தன்மை, பொதுநலத்துக்குஆக சிறிதாவது தன்னலம் விட்டு பாடுபட வேண்டும் என்கின்ற மனிதத்தன்மை ஆகியவை இல்லை என்பதுதான் நமக்கு பெருங் குறையாக இருக்கிறது.

இந்தக் குறை நமக்கு ஏற்பட்டதற்குக் காரணம் நமது மதம், நமது உயர்தரக் கல்வி நம் பண்டிதத்தன்மை என்பவை ஒருபுறமிருந்தாலும் நமக்கு பயன்படாதவும் நம் எதிரிகளுக்கு கூலியாக, கையாளாக, ஒற்றர்களாக இருக்கத் துணிந்து, வாழ்க்கை நடத்தவும் துணிந்து நம் பிரதிநிதிகள் என்று வேஷம் போட்டு நம்மை ஏமாற்றும் ஆட்களை நாம் சரிவர வெறுப்பதில்லை. அவர்களை சரிவர மக்கள் உணர்ந்து வெறுக்கும்படி நாம் எடுத்துக்காட்டுவது இல்லை, அப்படிப்பட்ட ஆளுக்கொருவர் இடம் அற்பகாரணங்களுக்கு நமது மானஉணர்ச்சி உள்ள மக்களும், மாணவர்களும், சலுகை காட்ட ஆரம்பித்துவிடுகிறார்கள். இதுதான் நம் நாட்டில் நம்மவர்களில் இத்தனை கேடானவர்கள், பயனற்றவர்கள் இருந்துகொண்டு நம் சமுதாயத்தின் போரால் மதிப்பும், பயனும் அடையக் காரணமாகும்.

உதாரணமாக சென்ற மாதம் நமது நாட்டுக்கு வந்திருந்த தோழர் காந்தி யாரை அவர் நம் எதிரிகளின் கைஆள் என்று யாருக்குத் தெரியாது? அவர் எதற்குஆக வந்தார்? என்ன செய்தார்? என்ன சொன்னார்? எவ்வளவு லாபத்தோடு போனார்? என்பதெல்லாம் யாருக்குத் தெரியாத இரகசியம்? சொல்லுங்கள் பார்க்கலாம்.

அவரை அழைத்தவர்கள் பார்ப்பனர்கள்; அவர் இருமருங்கிலும் அர்த்தநாரி போல் ஒட்டிக்கொண்டிருந்தவர்கள் பார்ப்பனர்கள். அவர் இறக்கப்பட்டது பார்ப்பனக் கோட்டையில், அவர் உடலை ஒரு பார்ப்பனரிடம் சிகிச்சைக்கு விட்டு விட்டார். அவர் புத்தியை ஒரு பார்ப்பனரிடம் நடத்த விட்டுவிட்டார், அவர் பிரசாரம் செய்தது பார்ப்பன (இந்தி) மொழியில், அவர் வேலை செய்தது பார்ப்பன உயர்வுக்கு ஏற்ற (இராம) பஜனை, அவர் உபதேசித்தது பார்ப்பனப் புராணம், அவர் காட்சியளித்தது பார்ப்பன பக்த சிகாமணி (மகாத்மா) யாக, அவர் "இந்தத் தமிழ்நாட்டில் நாணயமும் சக்தியும், திறமையும், தகுதியும் உடையவராக ஒருவர் இருக்கிறார்" என்று எடுத்துக்காட்டியது ஒரு (ஆச்சாரிய) பார்ப்பனரை, அவரைக்கண்டு இரகசியம பேசி அறிவுறுத்திவிட்டுப் போனவர்கள் யாவரும் பார்ப்பனர்கள், அவரே (காந்தியாரே)

(தொடர்ச்சி 7ம் பக்கம்)




10-2-46ந்தேதி சென்னை மயிலாப்பூர் கபாலி டாக்கீசில் நடைபெற்ற தென் சென்னை திராவிடர் முதலாவது மாநாட்டில் கலந்துகொண்ட கருஞ்சட்டைத் தொண்டர் படை.

ரோஜா முத்தையா

# கிளம்புது காண் சிங்கக்கூட்டம்!

## மாணவர் கோடை விடுமுறை சுற்றுப்பயணம்

மாணவர்கள் சுற்றுப்பயணம் இக்கோடை விடுமுறையில் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், சிறு கிராமங்களிலும் நடத்த வேண்டுமென விரும்புகிறோம்.

மாணவர்கள் புறப்படும் உறுதியான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

கூட்டம் நடத்திக்கொள்ள விருப்பமுள்ள அந்தந்த ஜில்லா தோழர்கள் அந்தந்த ஜில்லாவில் நியமிக்கப்பட்டுள்ள தோழருக்கு உடனே எழுதி தங்களூரில் கூட்டம் நடத்தக்கூடிய தேதியை உறுதி செய்துகொள்ள வேண்டியது.

ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது 100 கூட்டங்களாவது இவ்விடுமுறையில் நடத்தியாக வேண்டும். ஆதலால் தோழர்கள் யாவரும் உடனே முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக்கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

**தஞ்சை:**
வி. எஸ். பி. யாகூப்,
விசயபுரம், திருவாரூர்.

**இராமநாதபுரம்:**
இராமசுப்பையா,
சமதர்மவிலாஸ், காரைக்குடி.

**மதுரை:**
சி. முத்திருளாண்டி,
55 D புட்டுத்தோப்புரோடு, மதுரை.

**திருச்சி:**
டி. பி. வேதாசலம்,
வக்கீல், தென்னூர், திருச்சி.

**திருநெல்வேலி:**
கே. எம். பிரம்மநாயகம்,
குமார விலாஸ். காப்பி ஓட்டல்,
திருநெல்வேலி டவுன்.

**கோவை:**
என். இ. பாலகுரு,
பட்டக்காரர் பங்களா, ஈரோடு.

**வடாற்காடு:**
வி. எம். இராசமாணிக்கம்,
இலட்சுமி நூல் பதிப்பகம்,
திருப்பத்தூர் வடாற்காடு.

**தென்னாற்காடு:**
சி. முனுசாமி,
எம். ஆர். தாஸ் கம்பெனி,
சைகிள் ஸ்டோர், விருத்தாசலம்.

**சென்னை & செங்கல்பட்டு:**
என். வி. நடராசன்,
18, பெருமாள் முதலி தெரு,
பெத்துநாய்க்கன்பேட், சென்னை.

**சேலம்:**
எ. சித்தையன்,
C/o சுயமரியாதைச் சங்கம்,
செவ்வாப்பேட்டை, சேலம்.

மாணவத்தோழர்களே!

கோடை விடுமுறை நெருங்கிவிட்டது. மாணவத்தோழர்களை பிரசாரத்திற்கு அனுப்பும்படி பல இடங்களிலிருந்து கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன.

மாணவர்கள் பொறுப்பான முறையில் பிரச்சாரம் செய்யும்பொருட்டு பயிற்சிக் கூடம், திருச்சி அல்லது ஈரோட்டில் விரைவில் ஏற்படுத்தி, நாலைந்து நாட்களுக்கு பெரியார், அண்ணாதுரை, தோழர்கள் வேதாசலம் மற்றும் பல அறிஞர்களைக்கொண்டு அறிவுரைகள் நிகழ்த்திப் பல மாவட்டங்களுக்கும் மாணவத் தோழர்களைப் பிரித்து அனுப்ப ஏற்பாடாகிறது.

பிரசாரத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் கீழ்கண்ட விவரங்களை இன்னும் ஒரு வாரத்திற்குள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

பயிற்சிக்கூடத்தில் உணவு ஏற்பாடு முதலியன செய்யவேண்டியிருப்பதால் வரக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கை உடனே தெரியவேண்டியிருக்கிறது.

1. பெயர்:
2. தற்பொழுது பயிலும் பள்ளி அல்லது கல்லூரியும், வகுப்பும்.
3. பழைய மாணவராயின் தற்பொழுது செய்யும் வேலை.
4. பிரசாரம் செய்வதில் தங்களுக்குள்ள தகுதி, அனுபவம்.
5. எந்தத் தேதியிலிருந்து வரக்கூடும்?
6. பிரச்சாரத்தில் எத்தனை நாள் கலந்துகொள்ள முடியும்?
7. தற்போதைய முகவரி.
8. ஓய்வு கிடைத்ததும் தங்கும் முகவரி.

## சென்னைப் பல்கலைக் கழகத்தின் பதிவு செய்துகொண்ட பட்டதாரிகளுக்கு வேண்டுகோள்

அன்புடையீர்,

சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட்சபை தேர்தலுக்கு பதிவுசெய்துகொண்ட பட்டதாரிகள் தொகுதியின் மூலம் நான் போட்டியிடுகிறேன்.

இருபது ஆண்டுகளாக நான் சென்னை பச்சையப்பன் கல்லூரியின் ஆங்கிலப் போராசிரியனாக இருந்து வருகிறேன். மேலும் கடந்த பத்தாண்டுகளாக அகடமிக் கவுன்சில் மெம்பராகவும், சென்ற மூன்றாண்டுகளாக செனட் அங்கத்தினனாகவும் இருந்த அநுபவம், இப்பொழுது உங்களின் பிரதிநிதியாக செனட் சபைக்கு செல்வதற்கு உதவியாயிருக்கும் என நம்புகிறேன்.

ஆதலின், பட்டம்பெற்று பதிவு செய்துகொண்ட நண்பர்கள் எல்லோரையும் இயன்றவரை தங்கள் முதல் வோட்டையும் இல்லையெனில் இரண்டாவது வோட்டையாகிலும் எனக்கு அளிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

இங்ஙனம்
தங்களன்புள்ள,
M. வரதராஜம் B. A.,
ஆங்கிலப் போராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

கடல் கடந்த நாடுகளில் சேவை புரியும் பல்லாயிரக் கணக்கான இந்திய, பிரிட்டிஷ் துருப்புகள் இன்னும் அதிகமான சௌகரியங்களை அடைய ஆசைப்படுகின்றன.

★

எனவே
நமது துருப்புகளை எவ்வளவு தூரம் சந்தோஷமாகவும்,
சௌகரியமாகவும் வைத்திருக்க முடியுமோ அதற்கு
மேலும் பணம் தேவை என்று

**மே. த. கவர்னரின்**

சைன்யநிதி, நிவாரணநிதி மிக உருக்கமாக வேண்டுகோள் விடுகிறது
தயவுசெய்து உங்களது பணத்தை
"சைன்ய நிதி, நிவாரண நிதி" என்று குறிப்பிட்டு
ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள்,
கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா
முதல் லைன் பீச், சென்னை என்ற விலாசத்துக்கு
அனுப்பிக் கொடுக்கவும்.

# குடி அரசு

1946-ஞு மார்ச்சு 9-உ

## பிராமண மாநாடு

இந்த இருபதாவது நூற்றாண்டில் தென் இந்தியாவில் ஆரியர்கள் பிராமண மாநாடு கூட்ட ஏற்பாடு செய்கிறார்கள். இம்மாதம் 9, 10 தேதிகளில் சேலத்தில் கூடுகிறது. இதற்கு தென்னாட்டுப் பிரபல பார்ப்பனர் ஒருவரான சர் சி. பி. இராமசாமி அய்யர் என்பவர் தலைமைவகித்து மாநாடு நடத்திக் கொடுத்து வழி காட்டப்போகிறார். பிராமணன் என்றால் ஆங்கில அகராதியில் இந்துக்களில் உயர்ந்த ஜாதியான் என்று போட்டிருக்கிறது. தமிழ் அகராதிகளில் பிராமணன் என்றால் பார்ப்பான் என்றும், புரோகிதன் என்றும், முதல் ஜாதியான் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்துமத ஆதாரங்களில் சிரேஷ்டமானவர்கள் என்றும், கடவுள் முகத்தில் தோன்றியவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதோடு அவர்களுக்கு பல உயர்வும் மற்றவர்களுக்கு இல்லாத தனி உரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது. உழைப்பாளிகளையும், சேமிப்பு ஆட்களையும் ஏய்த்துச் சுரண்டுவதுதான் இவர்களது வாழ்க்கை தருமம். இப்படிப்பட்ட இந்த ஜாதியார் நம் நாட்டில் ஒரு கூட்டம் அதாவது 100க்கு 3பேர் விகிதமாக இருந்துகொண்டு இந்த மேற்சொல்லப்பட்ட சமய முதலிய ஆதாரங்களை ஆயுதமாக வைத்துக்கொண்டு தங்களை மற்ற எல்லா மக்களையும்விட உயர்ந்தவர்கள் என்று சட்டத்திலும் சமுதாயத்திலும் நடப்பிலும் செய்துகொண்டு நாட்டில் ஆதிக்கம் செலுத்தி உடல் உழைப்பு சிறிதும் இல்லாமல் எவ்வித பொறுப்புக்கும் ஆளாகாமல் உயர்வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் பிரபுக்கள், அறிஞர்கள், படித்தவர்கள், பண்டிதர்கள் முதலியயாவரும் பயந்து நடுங்கி மரியாதை செய்து கேட்டதைக் கொடுக்கும் தன்மையில் பயங்கர ஆதிக்கம் செலுத்தி வருகிறவர்களாவார்கள்.

இன்று அரசியலில் தலையாய அதிகாரிகள் பெரிதும் பார்ப்பனர்கள். மதத்தில் தலையாய ஆச்சாரி, குரு பீடம் உட்பட பார்ப்பனர்களே. கோவில்களில் தீக்ஷதர், பட்டர், அர்ச்சகர், ஆகியவர்களும் பார்ப்பனர்களேயாவார்கள்.

பள்ளிகளில் பிரதம ஆசிரியர்கள் முதல் பெரும்பாலும் ஆசிரியர்கள், அதிகாரிகள், சிப்பந்திகள் பார்ப்பனர்கள் ஆவார்கள்.

பத்திரிகைகள் அனேகமாய் யாவும் பார்ப்பனர்கள் வசமே. செல்வாக்கும், வர்த்தகர்கள்மீது ஆதிக்கமும்உள்ள பாங்கிகளின் நிர்வாகம் பெரிதும் பார்ப்பனர்கள் கையிலேயே. வரி விதிக்கும் அதிகாரிகள் பார்ப்பனர்கள், கணக்குப் பார்க்கும் ஆடிட்டர்கள் பார்ப்பனர்கள், சர்க்காருக்கு ஒற்றர்கள் பார்ப்பனர்கள், சர்க்காரின் அந்தரங்க நண்பர்களும், ஒப்பந்த ஆதரவாளர்களும் பார்ப்பனர்கள். நீதிபதிகள், நீதிவாதிகள், சமஸ்தான மந்திரிகள் பார்ப்பனர்கள். மொத்தமாக அவர்கள் (பார்ப்பனர்கள்) ஆதிக்கத்தில் இல்லாதது எது என்று சொல்லமுடியாத நிலையில் இந்நாடும் நாட்டு மக்களும் இருக்கிறார்கள் என்றால் அதை மறுப்பது என்பது எப்படிப்பட்டவர்களுக்கும் எளிதான காரியமல்ல என்றே சொல்லலாம்.

இப்படிப்பட்ட நிலையில் இருந்துகொண்டு இருக்கும் சமுகத்தினர்ஆன பார்ப்பனர்கள் தங்கள் சமுதாயத்திற்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக போலிக் கூப்பாடு போட்டு நாட்டிலுள்ள பார்ப்பனர் யாவரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு இன்று பிராமண பாதுகாப்பு மாநாடு என்று ஒன்று (இதன் நடவடிக்கைகள் பெரிதும் திரை மறைவில் நடக்கின்றன) கூட்டுகிறார்கள். இதற்குத்தான் திருவாங்கூர் திவான் சர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் தலைமைவகித்து அறிவுறுத்தி வழி காட்டப்போகிறார். என்றால் இது எதற்குஆக இருக்கும் என்பதை வாசகர்கள் சிந்திக்க வேண்டும்.

இந்த பார்ப்பனத் தன்மையின் தத்துவம் இன்று எப்படிச் சொல்லப்படுகிறது? எப்படி நடத்தப்படுகிறது? என்றால் பார்ப்பனர் என்பவர்கள் மற்ற யாவரைக்காட்டிலும் மேலான உயர்ந்த ஜாதி என்றும், மகா அறிவாளர்கள் என்றும் எல்லா வேலைக்கும் தாங்கள்தான் தகுதியானவர்கள் என்றும் அவரல்லாத மற்றவர்கள், இந்துக்களல்லாதவர்களாயிருந்தால் (முகம்மதியர், கிருஸ்த்தவர் முதலியவர்கள்) மிலேச்சர் என்றும், பார்ப்பனரல்லாத இந்துக்கள் யாவரும் சூத்திரர்—சண்டாளர், தீண்டப்படத்தகாதவர் (4ம் 5ம் வருணத்தார்) எந்த வேலைக்கும் தகுதியும், திறமையும் அற்றவர்கள் என்றும் சொல்லப்படுவதும், நடத்தப்படுவதுமாக இருக்கிறது.

இப்படிப்பட்ட பார்ப்பனர்களுக்கு 2500 வருடங்களுக்கு முந்திய புத்தர் காலம் தொடங்கி இன்று வரை எதிர்ப்பு இருந்து வந்தும் யாவற்றையும் சமாளித்து எதிரிகளையெல்லாம் தன் வசமாக்கி அடிமை கொண்டு இந்தப் பார்ப்பனர்கள் மேல்காட்டியபடி ஆதிக்கம் செலுத்திக்கொண்டுதான் வருகிறார்கள்.

அவர்களது ஆதிக்கத்தைப்பற்றி யாராவது எதிர்த்து வாதிடும்போதெல்லாம் வாதத்திற்கு சமாதானம் சொல்லமுடியாத சிக்கலில் பட்டுக்கொண்டபோதெல்லாம் அவர்களுக்கு ஒரே ஒரு வாக்கியம்தான் சமாதானமாக சொல்லப்பட்டு, ஆணவத்தோடு எதிரிகளின் வாயை அடக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது,

"பவுத்த சமணர் காலம்தொட்டு முஸ்லிம்கள் ஆதிக்கக் காலம் தொட்டும் அவர்களும் மற்றும் யாராரோ பார்ப்பனர்களை எதிர்த்தும் பார்ப்பன ஆதிக்கம் பெருமை அவர்களது உயர்வு முதலியவைகளை அசைக்க முடியாமல் தோல்வியுற்று பலர் பார்ப்பனியத்தை ஒப்புக்கொண்டு அடங்கி அடிமைப்பட்டுவரும் போது நீ எம்மாத்திரம்!"

"பார்ப்பனரோடுபோராடியவர்கள் யார் வெற்றிபெற்றார்? யார் மீந்தார்? யார் நாசமாகவில்லை? அப்படியிருக்க நீ எம்மாத்திரம்?

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

உன் முயற்சி பார்ப்பனர்களை என்ன செய்ய முடியும்"

என்பதுதான் அவர்களது சமாதான வாக்கியமாயிருந்து வந்தது, இன்றும் இருந்து வருகிறது.

இதற்குக் காரணம் என்னவென்றால் அவர்கள் ஆதிக்கத்திற்கும் மேன்மைக்கும் ஏற்றவிதமாக அவர்கள் சிருஷ்டித்துக் கொண்ட கடவுள்கள், மதம், ஆகியவைகளை நாம் ஏற்றுக் கொண்டு அவைகளுக்கு அவர்கள் வகுத்த கொள்கைகளுக்கு ஏற்ப நாம் நடந்துவருவதேயாகும்.

இப்போது சுயமரியாதைக்காரர்களும், திராவிடர் கழகத்தார்களும் அந்தக் கடவுள்கள், மதங்கள், அவற்றின் கொள்கைகள், ஆதாரங்கள் என்பவைகளோடு போர் தொடுக்க முற்பட்டு விட்டதால் இந்தப் போராட்டத்தை எதிர்த்து நிற்க பார்ப்பனர்கள்செய்த முயற்சியும், அவர்களது அடிமைகளும், கூலிகளும் செய்த முயற்சியும் அவர்கள் எதிர்பார்க்கும் பலன் கொடுக்காமல் மேலும் போராட்டத்திற்கு இடம் கொடுப்பதாய் இருப்பதால் இன்று அவர்கள் தங்கள் அடிமைகளையும், கூலிகளையும் நம்பாமல் தாங்களாகவே வெளிவந்து, பிராமணப் பாதுகாப்பு மாநாடு கூட்டி தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய அவசியத்திற்கு வந்துவிட்டார்கள். இது நமக்கு நம் முயற்சிகளில் ஒரு நல்ல நம்பிக்கை அளிக்கும் சம்பவமாகும்.

"மருந்து" வேலை செய்திருக்கிறது.

என்ன வேலை?

உத்தியோகம்—"விகிதாச்சாரம்" சமுதாயம்—"சமவுரிமை" அரசியல் ஆதிக்கம்—"ஆட்டம்" என்று சொல்லப்படக்கூடிய தன்மையும் கோவில்—மதம்—மத ஆதாரம் "வெறுக்கப்பட" "ஒழிக்கப்பட" போடும் கூப்பாடுகளை வெளிநாட்டிலிருந்து ஆள் கூட்டிவந்து பிரசாரம் செய்து காப்பாற்றப் படவேண்டிய தன்மையும் ஏற்பட்டிருக்கிறது என்பதே. அதுவும் பார்ப்பனர்களே கூட்டம்கூடி பரிகாரம் தேடவேண்டும் என்று முயற்சிக்கும் தன்மையே மருந்து வேலை செய்கிறது என்பதற்கு அறிகுறியாகும்.

## "குடி அரசு"

"குடி அரசு"க்காக எவ்வளவு பாடுபட்டும் போதிய (பேப்பர்) காகிதக் கோட்டா கிடைக்காமல் போய்விட்டதால் 16 பக்கங்களை 12 பக்கங்களாக்கி இப்போது 8 பக்கங்களாக ஆக்கவேண்டியதாக ஆகிவிட்டது. சந்தாதாரர்கள் பெருகுவதால் 4 பக்கங்கள் ஆக்க வேண்டி வந்தாலும்வரும் ஆகையால் வாசகர்கள் அருள்கூர்ந்து குறைபடாமல் திருப்தியடைய இறைஞ்சுகிறோம். விலை தனிப் பிரதி ஒரு அணாவாக குறைக்கப்பட்டிருக்கிறது.

மற்ற பத்திரிகைக்காரர்கள் பலர் தங்களுக்கு வேண்டியதற்கு மேல் 2-பங்கு 3-பங்கு காகிதம் பெற்று, அதிகவிலைக்கு கள்ள மார்க்கட்டில் விற்று நல்ல பணம் சம்பாதிக்கிறார்கள். ஆனால் நாம் 20-வருடங்களாக நடந்துவந்த பத்திரிகைக்கு கோட்டா கிடைக்காமல் திண்டாடுகிறோம். ஆனாலும் கையகலத்திலாவது நடந்துதான்தீரும் என்று வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—மானேஜர்.

## வேண்டுகோள்

தோழர்களே! குடி அரசு 8-பக்கங்களுடனேயே வெளியிடப்படுவதால் செய்திகள் பிரசுரிப்பது தாமதமாகும் என்பதோடு,– செய்தியனுப்பும் தோழர்கள் தயவுசெய்து அவசியமான செய்திகளை மட்டும் மிகச் சுருக்கமான முறையில் எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். பெரிதும் இபக்கச்செய்திகளுக்கே முதல் இடம் அளிக்கப்படும். தோழர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

## ஒத்துழைக்க வாரீர்!

வரும் கோடை விடுமுறையில் மாணவர் கூட்டம் பிரசாரத்திற்குக் கிளம்புகிறது. அதில் கலந்துகொள்ள விரும்பும் சொற்பொழிவாளர்களும், புலவர்களும் தங்கள் பெயர்களை ஈரோடு திராவிட மாணவர் பிரசாரக் கழக செயலாளருக்கு அறிவிக்கவேண்டுகிறோம்.

---

ஆனால் அது என்ன பலனை நமக்கு அளித்தது, எந்த அளவுக்கு குணம் ஏற்பட்டது என்பதை மாநாடு நடந்தபின்பு கை (பரிசோதித்துப்)பார்ப்போம்.

---

## கறுப்புச் சட்டைப் படை அமைப்பு

படையில் சேர்வதற்காக மனு பாரங்கள் பெற்ற தோழர்கள் உடனே பூர்த்தி செய்து அனுப்பவும்.

விரைவில் க. ச. படை மாகாண மாநாடு நடத்த இருப்பதால் இது வரை படை அமைக்கப்படாத இடங்களில் உடனே அமைத்துதவவும்.

படையில் சேர, மனு பாரம் வேண்டியவர்கள் "ரிப்ளை" கார்டில் எழுதவும்.

குறிப்பு:- 'ரிப்ளை' கார்டில் ரிப்ளை பாகத்தில் விலாசம் எழுதாமல் வெறும் கார்டாக அனுப்பவும்.

க. ச. ப. அமைப்பாளர்,
குடி அரசு ஆபீசு, ஈரோடு.

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 6-3-46 இரவு ஈரோட்டைவிட்டுப் புறப்பட்டு ஏற்காடு சென்று7-தேதி சென்னை சென்று 8, 9, 10 சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு 12ந் தேதி வாக்கில் ஈரோடு திரும்புவார்.

## சேலத்தில் கலப்பு மண அழைப்பு

சேலம் சுயமரியாதைச்சங்கச் செயலாளர் தோழர் எம். பி. சுப்ரமணியம் அவர்களுக்கும் கமலா அம்மையாருக்கும் கலப்புமணம் 13-3-46ல் சேலம் அரிசிபாளையம் லீபசார் மெயின்ரோட், A.D. தெரு R. 49ம் எண்ணுள்ள இல்லத்தில் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் அனைவரும் வந்து சிறப்பிக்கவேண்டுறோம்.

எம். பி. சுப்ரமணியம்,
கமலா அம்மையார்.

## அறிவுக்கு 144

சென்னை லயோலா கல்லூரி தமிழ்ச் சங்கக் காரியதரிசி தோழர் பி. கிருஷ்ணராஜ் அவர்களை ஷை கல்லூரியில் தமிழ்ச் சங்க ஆதரவில் பேச அதிகாரிகள் அனுமதி தராத காரணத்திற்காக தனது காரியதரிசி பதவியை ராஜினாமா செய்துவிட்டதாக அறிவித்துக் கொள்கிறார்.

# தியாகத்தீயில்!

23, 24-2-46ம் நாட்களில் நீடாமங்கலத்தில் நடைபெற்ற திராவிடர் மாணவர் மாகாண மாநாட்டைத் திறந்து வைத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ., ஆனர்ஸ் வகுப்பில் பயின்று வரும் தோழியர் காந்தி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு:

பெரியார் அவர்களே! தலைவர் அவர்களே! மாநாட்டு வரவேற்பு கழக உறுப்பினர்களே! மற்றுமுள்ள தோழர்களே! இம்மாநாட்டைத் திறக்கும் பெரும் பணியை கொடுத்ததற்கு எனது வணக்கம்.

தமிழ்நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் இப்பொழுது மாணவர் எழுச்சி கிளர்ந்து விளங்குவதனை உண்மை நோக்கோடு நோக்குபவர் உணராதிருக்க இயலாது. சில ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டு சிறுவர்கள் பலரும் இன்று சிறழியும் காங்கிரசும் அப்போர்வையிலுள்ள ஆரியமும் விளக்க முற பெரிதும் பாடுபட்டவர்கள் ஆவார்கள். அவர்களுள் இன்று பலர் திராவிட இன உணர்ச்சிமிகுந்து தியாகத் தீயில் சிறிப்பாயும் சிங்கங்களாக விளங்குகின்றார்கள்.

பெரியார் அவர்களின் பேருழைப்பும் தளபதிகளின் தளரா முயற்சியுமே இந்நிலைக்கு காரணமாகும். புகழுக்கோ அன்றி பொருளுக்கோ அல்லது வேறொன்றையோ எண்ணி பாடுபடாத நம் அரும்பெரும் தலைவர்கள் இந்நிலை கண்டு பெரிதும் இன்பத்தோடு இறுமாப்பும் கொள்கிறார்களென்றால் அது மிகையாகாது.

திராவிட மாணவர்களின் எழுச்சியினை ஓரளவு உலகுக்கு உணர்த்தியதும் எழுச்சிக்கு வித்தூன்றியதும் கும்பகோணமேயாகும். ஆரியம் பெருத்த குடந்தையில் தோழர் தவமணி அவர்களின் அடங்கா ஆர்வமே இதற்கு முழு அடிப்படையாகும். திருவாரூர், தஞ்சை, மதுரை, சென்னை, திருச்சி ஆகிய நாட்டின் பல பகுதிகளிலும் இக்கிளர்ச்சி விரிந்து பெருகியது என்பதனை நாம் அறிவோம்.

இந்நாளில் மாணவர் கிளர்ச்சியில் முன்னணியில் நிற்பது அண்ணாமலை பல்கலைக் கழகமாகும். பார்ப்பனர்கள் நலத்திற்குத்தான் தோன்றியதோ என்று எண்ணி திராவிடர்கள் கலங்கிய நிலையிலிருந்த அப்பல்கலைக் கழகம் இன்று ஆரியத்திற்கு சாவுமணி அடிக்கும் பல தளபதிகளை உற்பத்திசெய்யும் நிலைக்களமாகவும் பல வீரத்தொண்டர்களை எஃகு உள்ளம் படைத்தவர்களாக தயாரித்து அனுப்பும் பெருநிலையமாகவும் விளங்குகின்றது என்பதனை

எண்ணுகிறபோது அக்கழகத்தில் படித்து வருகின்ற நான் உண்மையிலேயே உங்களைக்காட்டிலும் அதிகமாக மகிழ்ச்சி அடைகிறேன். பல மாணவர் தளபதிகளும் இயக்கத் தலைவர்களும் அறிஞர்களும் நிரம்பிய இம்மாநாடு எதிர்கால மாணவ உலகத்துக்கு சிறந்த வழிவகைகளை வகுக்கும் என்று உறுதியாய் நம்புகிறேன், என்று கூறி இம்மாநாட்டினைத் திறந்து வைக்கிறேன்.

## மறுமண அழைப்பு

தோழர்களே! 13-3-46 காலை 10மணிக்கு சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்க பாடசாலையில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் கிருஷ்ணகிரி வி. கிருஷ்ணப்ப செட்டியார் மகள் தோழர் சகுந்தலையை நான் மறுமணம் செய்துகொள்ள முடிவு செய்திருப்பதால் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்கள்,
S. P லிங்கசாமி,
தங்கள் வரவை எதிர்பார்க்கும்,
D. K. சகுந்தலை.

## கோவை மாவட்டத்தில் இயக்கப் பிரச்சாரம்

கீழ்க்கண்ட இடங்களில் கோவை மாவட்ட பிரசாரகர் தோழர் என். இ. பாலகுரு அவர்கள் பிரச்சாரம் செய்வார்.

11-3-46 உடுமலைப்பேட்டை
12— பொள்ளாச்சி
13— ஆனைமலை
14— கோவை
15— சூலூர்
16— ஓய்வு
17— கோபி

இன்னும் தங்கள் ஊர்களுக்கு அழைக்க விரும்பும் தோழர்கள், S. R. சந்தானம், செயலாளர், கோவை மாவட்ட திராவிடர் கழகம், ஈரோடு. என்ற முகவரிக்கு எழுதவும்.

## மஞ்சை திராவிடர் கழகம்

17-2-46 காலை 9மணிக்கு கடலூர் மஞ்சகுப்பத்தில் தோழர் ஆ. திராவிடமணி அவர்களால் திராவிடர் கழகம் திறந்து வைக்கப்பட்டது. தோழர் இளம்பெருவழுதி தலைமை தாங்கினார். தோழர் வீரமணி சொற்பொழிவாற்றினார். மாற்றுக்கட்சித் தோழர் ஒருவர் கேட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் அளிக்கப்பட்டது. தோழர் மதிவாணன் அவர்கள் நன்றி கூறினார்.

---

திருவாரூர் கீழவீதி தோழர் கு. தெட்சணாமூர்த்தியிடம் புதிய இயக்க வெளியீடுகளும் தலைவர்கள் படங்களமைந்த கார்டு, கவர், லெட்டர்பேடுகள், திராவிடர் கழகக் குறிப்புக்களும் கிடைக்கும்.

## திராவிடர் கழக நிதிக்கமிட்டிக் கூட்டம்

4-3-46 திங்கள் காலை 10 மணிக்கு தோழர் தி பொ. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் நிதிக்கமிட்டித் தலைவர் என். அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நிதிக்கமிட்டி கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு ஜில்லாவிற்கும் பொறுப்பாக இரண்டொருவரைத் தேர்ந்தெடுத்து அவர்கள்மூலம் அந்தந்த ஜில்லா வசூலைக் கவனிப்பதெனவும், எல்லா இடங்களுக்கும்சென்று வசூலைக் கவனிக்க முழுநேர சுற்றுப்பிரயாணம் செய்யும் இரண்டொருவரை சம்பளத்திற்கு நியமித்து வேலை செய்வதெனவும், டிக்கட்டுகள் அச்சடித்தானவுடன் கழக நிர்வாகக் கமிட்டியைக் கூட்டி, அந்தந்த ஜில்லா கோட்டாபடி டிக்கட்டுகளைக் கொடுப்பதெனவும், கோடை விடுமுறைக்குள் வசூல் முடியவேண்டுமென்றும், மாணவர்களையும், கருப்புச் சட்டை தொண்டர்களையும் இவ்விடுமுறையில் வசூல் வேலைக்குப் பயன்படுத்திக் கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

---

## சென்னை 2வது சர்க்கிள் திராவிடர் மாநாடு

17-3-46 ஞாயிறு காலை 8மணிமுதல் 12-30 வரை.

சென்னை ஜார்ஜ் டவுன் சினிமா சென்ட்ரல் தியேட்டரில் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திறப்பாளர்:- கே. அன்பழகன் எம்.ஏ.,

கொடியேற்றுபவர்:- என். எம். சுப்ரமணியம்;

பெரியார் ஈ. வெ. ரா., தளபதி சி. என். ஏ., சனார்த்தனம் எம். ஏ., கலந்து கொள்வார்கள்.

மாலை 4மணிக்கு பெத்துநாயக்கன் பேட்டை சிவஞானம் பார்க்கிலிருந்து கருப்புச்சட்டைப்படை ஊர்வலம் நடைபெறும்.

### கடற்கரைக் கூட்டம்

17-3-46 மாலை 6மணிக்கு திருவல்லிக்கேணிக் கடற்கரையில் தோழர் C. D. T. அரசு தலைமையில் நடைபெறுங்கூட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. தளபதி சி. என். ஏ, சொற்பொழிவாற்றுவார்கள்.

மாநாட்டுக் கட்டணம் 0-4-0
வரவேற்பாளர் 0-8-0
எஸ். பாலசுந்தரம், வரவேற்புத் தலைவர்.
கே. கோவிந்தசாமி, செயலாளர்.

ரோஜா முத்தையா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

னோராக இரண்டு மூன்று தடவை தேடிப் போய் பேட்டிகண்டு மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கும் "காந்தியார் மரியாதைபெற்ற பிரம்மாண்டமான பெரிய மனிதர்" என்று கருதும்படியான பெருமை கொடுக்கப்பட்டதும் ஒரு பார்ப்பன (ஸ்ரீனிவாச சாஸ்திரியா)ருக்கு, அவர் காரியங்களில் கலந்துகொண்டது அத்தனைபேரும் பார்ப்பனர்கள், அவருக்கு ஆலாத்தி எடுத்து, குங்குமம் வைத்தது பார்ப்பனத்திகள் என்கின்ற இவைகள் யாருக்குத் தெரியாத இரகசியம் என்று கேட்கின்றேன்.

ஆனால் அவர் காலில் விழுந்தவர்கள் அத்தனைபேரும் பார்ப்பனர் அல்லாத தமிழர்கள், அவர் காலைத்தொட்டு கும்பிட்டவர்கள் தமிழர்கள், பஜனையில் கலந்துகொண்டு ஸ்மரணை அற்று சொக்கினவர்கள் தமிழர்கள், அவருக்கு மூட்டை மூட்டையாக பணம் கொடுத்து ஆசீர்வாதம் பெற்றவர்கள் தமிழர்கள்; அதுவும் வெறும் தமிழர்கள் அல்ல, தமிழ் இனம் என்று சொல்லிக்கொள்ளும் நாட்டுக்கோட்டையார்கள், மில் முதலாளிகள், மிராசுதார்கள் ஆகிய தமிழர்கள். நகைகள் கழற்றிக் கொடுத்துவிழுந்து கும்பிட்டு நல்வாக்குப் பெற்றவர்கள் இவர் (தமிழர்) களின் மனைவி மக்கள்மார்கள்.

இவ்வளவு மாத்திரமா, "கண்ணில் படக்கூடிய தூரத்தில், காதுக்கு எட்டும் தூரத்தில்தான் நான் காத்துக்கிடந்தேன். என்னை என் என்றுகூட சட்டைசெய்யவில்லை, என் மீது என் எதிரி (பார்ப்பனர்)கள் சுமத்திய குற்றத்தை விசாரிக்கக்கூட என்னை சமாதானம் கேட்டுப் பார்க்கக்கூட கருணை காட்டாமல் ஒருதலைப்பட்சமாய் தண்டித்துவிட்டாரே" என்று அழுதவரும் (தமிழர் தலைவர், தமிழ்நாட்டு ராஷ்டிரபதி) தமிழரே ஆவார். காந்தியாரால் கெட்ட அர்த்தத்தில் படும்படியான (விஷமக்கும்பல் என்ற) கடுஞ்சொல் சொல்லப்பட்டவர்கள் தமிழர்கள், இதற்குஆக குறை இரந்து நின்றவர்கள் தமிழர்கள், "ஆம் நான் அப்படித்தான் சொன்னேன், இனியும் சொல்லுவேன். இஷ்டமிருந்தால் தலைவராக இரு, இல்லாவிட்டால் போ" என்று உதாசீனப்படுத்தப்பட்டவன் தமிழன்.

இவ்வளவு போதாதா காந்தியார் நம் எதிரிகள் கூலி என்பதற்கும் தமிழ்மக்கள் மானமற்றும் எதிரிகளுக்கு கையாட்களாக இருப்பதில் பெருமை கொள்ளுபவர்கள் என்பதற்கும் அத்தாட்சி? என்று கேட்கிறேன்.

**காங்கிரசில் இருக்கும் தமிழ்மக்களுக்கு காங்கிரசும், காந்தியார் போலவே தமிழ் மக்களின் எதிரிகளது கையாயுதம் என்**பது உண்மையிலேயே தெரியாதா என்று கேட்கிறேன்.

தமிழ்நாட்டில் தமிழன் சட்டசபை மெம்பர் ஆவதற்கோ, மந்திரி ஆவதற்கோ பார்ப்பனர் கடாட்சம் இல்லாவிட்டால் பார்ப்பனர்களது அடிமையாய் இல்லாவிட்டால் முடியாது என்பது எந்தக் காங்கிரஸ் தமிழராவது தனக்குத் தெரியாது என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

பார்ப்பனரை விரோதித்துக்கொண்டால் தம்மால் வாழமுடியாது என்பது இந்த நாட்டில் எந்த சர் தமிழராவது, கோடீஸ்வரர் தமிழராவது, மில் முதலாளி தமிழராவது, மிராஸ்தார் தமிழராவது இராஜா தமிழராவது, ஜமீன்தார் தமிழராவது அறியாததா என்று கேட்கிறேன். அல்லது இவர்களில் யாராவது காந்தியாரோ, பார்ப்பனரோ, காங்கிரசோ நம் இனத்திற்கு விரோதமானதென்றும் பார்ப்பன வாழ்வுக்கு ஏற்றதென்றும் தெரியாதவர்கள் உண்டா என்று கேட்கிறேன்.

இப்படிப்பட்ட மானமற்ற இன உணர்வற்ற இழிதன்மையில் சுயநலம் தேடுகிற மக்கள் பார்ப்பனர்களில் யாராவது இருக்கிறார்களா என்று சொல்லுங்கள் பார்க்கலாம். முஸ்லிம்களில் யாராவது இருக்கிறார்களா? கிறிஸ்தவர்களில் யாராவது இருக்கிறார்களா? வெள்ளையர்களில் யாராவது இருக்கிறார்களா? ஆங்கிலோ இந்தியர்களில்தானாகட்டும் யாராவது இருக்கிறார்களா?

உலகத்தில் இல்லாத இழிகுணங்கள், மானமற்ற தன்மைகள் தமிழனுக்குத் தானா, பிதுரார்ஜித சொத்தாக இருக்க வேண்டும்?

மாணவர்களே, இளைஞர்களே, இந்த இழிநிலை நீக்கப்படுவதற்குஆக நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்; இந்த உங்கள் பிதுரார்ஜித சொத்தை 'தூ'வென்று காரித்துப்புங்கள். இப்படிப்பட்ட உங்கள் பெற்றோர்களை மனித உருவம்தாங்கிய கீழ்த்தரப்பிராணி என்று கருதுங்கள். அவர்கள் யாராய் இருந்தாலும், சர் முதல்சாஹேப் வரை, கோடீஸ்வரர் முதல் மில்முதலாளி முதல் மிராசுதார் வரை மற்றும் எப்படிப்பட்ட பட்டம், பதவி, பணம், பெருமை, நாளைக்கு முதல் மந்திரி, கவர்னர், வைசிராய் ஆகக்கூடிய தன்மை உடையவர்களாக இருந்தாலும், வெறுத்துக்கொடும்பாவி கட்டி இழுங்கள். அவர்கள் வயிற்றில் பிறந்த இழிவுக்குஆக கொடும்பாவிக்கு முன் கொள்ளிச்சட்டி தூக்கிக்கொண்டு நடவுங்கள்.

**நாம் யார்? நம் உண்மை சரித்திரம் எப்படிப்பட்டது? உலகில் நம் பழைய அந்தஸ்து என்ன? எதிரிக்கு ஜே போடுவது, எதிரியைக் கண்டு நடுங்கி நரி தந்திரம்** செய்வது, எதிரியைக் கைகூப்பித் தொழுது ஈனவாழ்வு வாழுவது ஆகிய குணம் தானா நமக்கு நம் கடவுள்களும் மதமும் கலை காவியங்களும் கற்பித்தது? நம் சரித்திரத்தில் இதுதானா சொல்லி இருக்கிறது? கலை இரசிகர்களே, காவிய ரசிகர்களே, பா(B)வம் கண்டு பரவசப்படுபவர்களே, இலக்கிய இரசிகர்களே, இராம பக்தர்களே, முருக பக்தர்களே, செந்தூர்வேலன் பக்தர்களே, புராண காவியங்களுக்குப் புதுப்பொருள், கருப்பொருள், நுண்பொருள் கண்டு கலை இரசத்தில் மூழ்கி, கரைகாணாமல் இருக்கும் பண்டிதர்களே இவை எல்லாம் உங்களுக்கு கற்றுக்கொடுத்ததும் இவைகளால் எல்லாம் உங்களுக்கு ஏற்பட்டதுமான பிரசாத பாக்கியம் இதுதானா என்று கேட்கிறேன்.

இன மானம், தன்மானத்தினும் பெரிது. உண்மையில் பெரியது. அது பட்டம்பெற்ற கல்வியிலும் பெரிது. பணம் ஊற்றுள்ள உத்தியோக தடாகத்திலும் பெரிது. பரம்பரை மகாராஜா பட்டத்திலும், சர்ரிலும் பெரிது. மணிக்கு ஒரு லட்சம் வருவாய் குவியலுக்கும் பெரிது. இதை உணரவேண்டும் என்பதுதான் தேர்தலை வெறுத்ததின் பெருநோக்கமாகும்.

ஆகவே இனி நம் வாழ்வு, மனித வாழ்வு ஆவதற்கு மாணவர் இளைஞர்களே நீங்கள் மனம் வைத்தால் தான் உண்டு, உங்கள் எண்ணம் இதைவிட படிப்பிலும், பதவியிலும் பணம் தேடுவதிலும் செல்லுமேயானால் உங்கள் பெற்றோர்கள் கொண்டாடும் மதத்தில் பார்ப்பனர்கள் உங்களை வைத்து இருக்கும் இடம் மிகமிகப் பொருத்தமானதென்றே சொல்லுவேன். ஒருபுறம் நீங்கள் அந்த இடத்தை வாயில் வெறுத்துக்கொண்டு காரியத்தில் அந்த கடத்தையைக் கட்டித் தழுவிக்கொண்டிருந்தால் அது நம் இழிநிலையை வலியுறுத்துவதேயாகும்.

தோழர்களே வாருங்கள் வெளியில்! உங்களுக்கு கல்யாணமாகி இருந்தால் உங்கள் மனைவியையும் அழையுங்கள், வராவிட்டால் விட்டொழியுங்கள்!! பிள்ளை குட்டிகள் இருந்தால் அவற்றை அனாதை ஆசிரமத்தில் கொண்டு போய் விடுங்கள், ஆச்சிரமம் இல்லாவிட்டால் மகமதிய அனாதை காப்பு இடத்திலேயோ, கிறிஸ்துவ அனாதை காப்பு இடத்திலேயோ விட்டு விட்டு வாருங்கள். உங்களுக்கு இனி காலம் இல்லை. நாளை இப்படிப்பட்ட காலம் வராது, நான் ஆகஆக நீங்களும் உங்கள் பெற்றோர்கள்போல ஆகி உங்களைப்போன்ற பிள்ளைகளைப் பெற்று எதிரிக்கு கையாளான, அடிமையான

## கறுப்புச்சட்டைப் படை மாகாண மாநாடு

மேற்படி மாநாடு மதுரையில் ஏப்ரல் மாதத்தில் நடைபெற இருப்பதால் ஒவ்வொரு இடத்திலும் உள்ள கறுப்புச் சட்டைப்படை தொண்டர்கள் எண்ணிக்கை, நிர்வாகஸ்தர்கள், படைத் தலைவர்கள் (கேப்டன்) முதலிய விவரங்களைக் கீழுள்ள முகவரிக்கு ஒரு வாரத்திற்குள் தெரிவிக்க வேண்டுகிறோம்.

மாநாட்டு வரவேற்புக் கமிட்டி 24-3-46ல் நடைபெறும் கூட்டத்தில் அமைக்க முடிவு செய்துள்ளதால் 20-3-46க்குள் திருச்சி, தஞ்சை, கோவை, சேலம், சென்னை ஆகிய ஜில்லாக்களிலிருந்து இருவர் வீதமும், மற்ற ஜில்லாக்களிலிருந்து ஒருவர் வீதமும் வரவேற்புக் கமிட்டி பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து விவரத்தைக் கீழுள்ள முகவரிக்கு தெரிவிக்கக் கோருகிறோம்.

இங்ஙனம்,
க. ச. படை மாகாண மாநாட்டு
அமைச்சர்கள்.

முகவரி:
பு.ரா. மதிவாணன்,
க. ச. படைக்காரியாலயம்,
20, வடுகக்காவல்கூடத்தெரு,
மதுரை.

---

பிள்ளைகளைப்பெற்று விடத்தான் நேரும். எதிரிகளின் அரண் இப்போது கட்டப்படுகிறது. அதை முளையிலேயே இடித்துத் தள்ளத்தயாராகுங்கள், உங்கள் தனிப்பட்ட நலனை அலட்சியம் செய்வது என்கின்ற அந்த ஒரு ஒப்பற்ற ஆயுதம் அணுக்குண்டையும் வெடிக்காமல் செய்துவிடும். ஆதலால் எழுங்கள் வரிந்து கட்டுங்கள் புறப்படத் தயாராகுங்கள், சங்கநாதம் ஒலிக்கப்போகிறது என்பதாக வீரமுழக்கம் செய்தார்.

## நடக்க இருப்பவை

● 31-3-46 ஞாயிறன்று கூடலூர் O.T. திராவிடர் கழக ஆண்டுவிழா மாநாடு கூடலூர் O. T., S. P. G. உயர்நிலைப் பள்ளியில் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். திறப்பாளர் பெரியார் ஈ. வெ. ரா., கொடி உயர்த்துவோர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தோழியர் லாரென்ஸ் தோழர்கள் ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ., தி. பொ. வேதாசலம் பி. ஏ; ஈ.வெ.கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன் பி. ஏ, (ஆனர்சு) மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

● 31-3-46ல் வெளிப்பாளையம் மணி பகுத்தறிவுக்கழக 2-வது ஆண்டுவிழா நடைபெறும்.

● 10-3-46 ஞாயிறு மாலை 6-மணிக்கு சென்னை அமிஞ்சிக்கரை திராவிடர் கழக ஆண்டுவிழா லட்சுமி டாக்கீசில் தோழர் C. D. T. அரசு தலைமையில் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா., சத்யவாணிமுத்து, கே. அன்பழகன் ஆகியோர் பேசுவார்கள்.

● 10-3-46 மாலை 3-மணிக்கு சாத்தூர் தாலுகா திராவிடர் கழக கூட்டம், சாத்தூர் பிரயாணிகள் விடுதியில் நடைபெறும். எஸ். எஸ். பழனிசாமி கலந்துகொள்வார்.

● 17-3-46 மாலை 3மணிக்கு சேலம் ஜில்லா திராவிடர்கழக நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தில் நடைபெறும்.

● 10-3-46 காலை 8-30க்கு சென்னை பெரியமேட் திராவிடர் கழக அமைப்பு ஆலோசனைக்கூட்டம் தோழர் மு. பழனிசாமி தலைமையில் நடைபெறும்.

● 12-3-46 மாலை 6மணிக்கு பெத்து நாயக்கன்பேட்டை சிவஞானம் பார்க்கில் சென்னை ஜில்லா திராவிடர் கழக உறுப்


## 'செலக்ட்' ஈரோடு

தலைவர்களின் படங்களுடன் கூடிய திராவிடர் கழக குறிப்பு: விலை அணா 0-10-0. புரட்சிக்கொடி, தலைவர்கள் படங்களுடன் கூடிய கார்கவர்கள் 100க்கு ரூ 2. மூன்று கலரில் பெரியார், திராவிடம், கொடி அமைந்த லெட்டர் பேடு ரூ. 1-8-0. பெரியார், சி. என். ஏ., பாரதிதாசன், மாணவர்கள் போட்டோக்கள் எல்லா வகையிலும் கிடைப்பதோடு, தளபதி சி. என். ஏ. அவர்களின் திராவிடர் நிலை, நாடும் ஏடும், நல்ல தீர்ப்பு, தளபதிகளின் வீரஉரைகள், பாரதிதாசன் நூற்கள், மற்றும் கிழவன் கனவு, எமது புதிய வெளியீடான கருணாநிதி எழுதிய "கவிதையல்ல!" இன்னும் இயக்கப் புத்தகங்கள் கிடைக்கும். தபாற்செலவு வேறு. வியாபாரிகட்கு கமிஷன் உண்டு.

R. ஹூர்துசாமி, செலக்ட் புக்ஸ்டால்,
142, கச்சேரி வீதி, ஈரோடு.


## அங்கத்தினர் சேர்த்தல்

தோழர்களே, அந்தந்த மாவட்டத்தில் இதுவரை சேர்த்துள்ள அங்கத்தினர்கள் எண்ணிக்கைக் குறிப்பை அடுத்த கிழமையிலிருந்து வெளியிட வேண்டியிருப்பதால் இதுவரை இரசீது புத்தகங்கள் பெற்ற தோழர்கள் உடனே அங்கத்தினர்களைச் சேர்த்தனுப்பக் கோருகிறேன்.

இன்னும் அநேக திராவிடர் கழகங்களிலிருந்து இரசீது புத்தகங்கள் அனுப்புமாறுகூடஎழுதவேயில்லை. எல்லாத் தோழர்களும் உடனே தேவையான இரசீது புத்தகங்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்வதோடு அன்புகூர்ந்து அயராது முயன்று அங்கத்தினர்களைச் சேர்த்தனுப்பக் கோருகிறேன்.

கழகத்தில் அங்கத்தினராகச் சேர விரும்பும் (கழகம் இல்லாத இடங்களிலுள்ள) தனிப்பட்ட தோழர்கள் 5½ அணா தபால் தலை அனுப்பிவைத்தால் அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டு இரசீது அனுப்பி வைக்கப்படும்.

## கழகம் அமைத்தல்

அநேக மாவட்டங்களில் இன்னும் முறையாக மாவட்ட தலைமை திராவிடர் கழகம் அமைக்கப்படவில்லை. தாலுகா கழகங்களும் அமைக்கப்படவில்லை.

அந்தந்த மாவட்ட முக்கியஸ்தர்கள் உடனே மாவட்ட, தாலுகா கழகங்களை அமைத்து நிர்வாகஸ்தர்கள் பெயர்களை தெரிவிக்குமாறு கோருகிறேன்.

செயலாளர்,
திராவிடர் கழகம்,
தலைமை நிலையம், ஈரோடு.

---

பினர் சேர்க்கும் வாரப்பொதுக்கூட்டம் தோழர் அன்பழகன் தலைமையில் நடைபெறும். ஜனார்த்தனம், என். வி. நடராசன் பேசுவார்கள். மார்ச் 13, 14, 15, 16, தேதிகளில் மாலை 6மணிக்கு வண்ணை, ராயபுரம், ஆசீர்வாதபுரம், புரசை, மயிலை, மூலக்கொத்தளம் ஆகிய டிவிஷன்களிலும் கூட்டங்கள் நடைபெறும்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.